சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>பு.த.சா.1ரமேஷ் த /பெ பூஞ்சோலை , வயது.36</u>

**<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை.-</u>**

பூஞ்சோலை மார்கெட், லாட்ஜ், மருந்தகம் ஆகியவை எல்லாம் எனது என்றால் மருந்தகம் மட்டும் என்னுடையது. மார்க்கெட் மற்றும் லாட்ஜ் யார் பேரில் உள்ளது என்றால் தந்தை மற்றும் சதோதரர் பேரில் உள்ளது. என்னுடைய சகோதரர் பெயர் என்ன என்றால் சுரேஷ். மருந்தக வரவு செலவு கணக்கு முறையாக பரமாரிக்கப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி கணக்கு முறையாக ஆடிட் செய்யப்படுகிறது என்றால் சரிதான். மருந்தக கணக்கு தனியாக தாக்கல்செய்யப்படுகிறதா என்றால் தனிதனியாக தாக்கல் செய்கிறேன். 2018-2019, 2019-2020 தணிக்கையில் மேற்படி காசோலை தொகை காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஏன் காட்டவில்லை என்றால் சரியாக நினைவில்லை. ஆடிட்டரை கேட்கவேண்டும். என்னுடைய தணிக்கை கணக்கை தாக்கல் செய்வேனா என்றால் செய்வேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை யார் சொன்னார்கள் என்றால் நான்தான் சொன்னேன். ரூ.160000 கொடுத்தாக குறிப்பிட்டுள்ளனேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். மொத்தமாக கொடுக்கப்பட்டாதா என்றால் இரண்டு தவனையாக கொடுக்கப்பட்டது. எந்த எந்த தேதிகளில் கொடுக்கப்ட்டது என்றால் நினைவில்லை. எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் 2019, 2020 ஆகும். மருந்தகத்தில் தினமும் பதிவேடுகள் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். 12.12.2018ம் அன்று ரூ.7,50,000/- நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வதற்கு பதிவேட்டில் ஏதும் குறிப்பு செய்யப்பட்டதா என்றால் பணம் கொடுத்தது உண்மை ஆனால் எழுதிவைக்கவில்லை. மேற்படி தொகை கொடுத்தற்கு கையொப்பம் ஏதும் பெறப்பட்டதா என்றால் முழுக்க முழுக்க நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. எதிரி அவருக்கு ஏலகிரி மலையில் உள்ள சொத்தை விற்பது சம்மந்தமாக பேசிக்கொண்டிருப்பதாகவும் அதனால் ஆறு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக சொன்னதால் நான் பணம் கொடுத்தேன். எந்த சர்வே

எண்ணில் சொத்து உள்ளது என்றும், பத்திரம் உள்ளதா என்றும் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை அவர் என்னுடைய பள்ளி காலத்திலிருந்து நண்பர் என்பதால் பணம் கொடுத்தேன். என்னுடைய சகோதரர் சுரேஷ் மற்றும் நான் காவல் நிலையத்தில் டேனியல் மற்றும் அவரது மனைவி பெயரில் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நான் கொடுக்கவில்லை. என் சகோதரர் கொடுத்தாரா என்றால் அவர் ்கொடுத்த மாதிரி எனக்கு நினைவில்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் அதில் உள்ள விவரம் அனைத்தும் பொய். பதில் அறிவிப்பில் என்ன கூறியுள்ளார் என்றால் என் அண்ணன் சீட்டு நடத்தியதாகவும் அதற்கு எதிரி காசோலை கொடுத்ததாகவும், அந்த காசோலை என்னிடம் வந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பதில் அறிவிப்பில் சொன்ன தகவலை பற்றி சகோதரரிடம்கேட்டேனா என்றால் அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை என என்னுடைய சகோதரர் சுரேஷ் சொன்னார். கடையசியாக எதிரியிடம் எப்போது பேசினேன் என்றால் காசோலை கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் பணம் வேண்டும் என்று கேட்டேன். எதிரி அனுப்பி பதில் அறிப்பில் 11.01.2022 ல் நானும் எனதுஅண்ணனும் டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த காசோலைக்கு பணம் கேட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. 11.01.2022 அன்று CSR கொடுக்கப்பட்டதாக பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளரா என்றால் ஞாபகம் இல்லை. ஞாபகம் இருந்த போது CSR என்ன என்று விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரே கொடுக்கவில்லை அதனால் விசாரிக்கவில்லை. 12.12.2018 அன்று டேனியல் எங்கு குடியிருந்தார் என்றால் என்னுடைய கடைக்கு பக்கத்தில் இரண்டு தெருக்கல் தள்ளி அவர் செல்போன் கடை வைத்திருந்தார். எங்கு குடியிருந்தார் என்றால் தெரியாது. எதிரியின் மாமனார் தெரியுமா என்றால் தெரியும் என்னுடைய ரெகுலர் வாடிக்கையாளர். எதிரியின் மாமனாரும் திருப்பத்தூரில் IT தாக்கல் செய்பவரா என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் மாமனார் வசதியானவரா என்றால் ஓரளவிற்கு வசதியானவர். என்னிடம் எதிரியின் மாமனார் பணம் வாங்கி கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு அதனை விசாரித்துக்கொடுத்தேனா என்றால் எதிரி அவருடைய மாமனாருக்கு உடல் நிலை சரியில்லை என்றும் அவசர தேவைக்கு பணம் வேண்டும் என்று கேட்டதால் கொடுத்தேன். ஏலகிரி மலையில் உள்ள சொத்தை விற்பனை செய்து பணம்

கொடுப்பதாக எதிரி சொன்னார் என்று நான் சொல்வதை என்னுடைய புகார் மற்றும் முதன்மை வாக்குமூலத்தில சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏன் சொல்லவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்ததால் குறிப்பிடவில்லை. 10 நாட்களில் வந்துவிடும் என்று குறிப்பிவில்லை. எனக்கு என்னுடைய சகோதரருக்கும் நல்ல உறவு முறை என்றால் சரிதான். எதிரி என்னுடைய சகோதரரிடம் மாதந்திர சீட்டு செலுத்தியதாக பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். மேலும் அந்த சீட்டிற்காக பியைத்திற்காக வழக்கு காசோலை என்னுடைய சகோதரரிடம் எதிரி கொடுத்தாக பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளாரா என்றால் சாட்சி இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் என் அண்ணனிடம் அதனை பற்றி கேட்டேனா என்றால் கேட்டேன் அவர் அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார். என்னுடைய சகோதரரை சாட்சியாக விசாரிக்கசீீர்களா என்றால் தேவையில்லை. எதிரிக்கு பணம் கொடுக்கும்போது ஏரேனும் உடன் இருந்தார்களா என்றால் கடையில் ஊளியர்கள் இருந்தார்கள். அந்த ஊளியர்களை விசாரிப்பேனா என்றால் தேவையில்லை. ஊளியரின் பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை. எதிரி என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் அவரிடம் எந்த தேதியிலும் எந்த த்தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் மாமனார் பல நபர்களுக்கு உதவி செய்தவர் என்பதால் அவருடைய மருத்துவ செலவிற்கு பணம் வாங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மாமியார் 2 மாதங்களுக்கு முன்னர் கடைக்கு வந்தபோது பணத்தை கேட்டபோது பணத்தை வாங்கி தருவதாக சாட்சி கூறுகிறார். எதிரி என்னுடைய சகோதரரிடம் மாதந்திர சீட்டிற்கு பிணையமாக கொடுத்த காசோலையை வாங்கி தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் பணம் கொடுத்திருந்தால் ஆண்டு தணிக்கையில் காட்டியிருப்பேன் என்றாலும் நான் பணம் எதுவும் எதிரிக்கு கொடுக்கவில்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

Signature of Witness.